# சென்னையில் கூட்டுப்போராட்டக்குழு 09-07-2010ல் நடத்திய பிரம்மாண்டமான சிறப்புக் கருத்தரங்கத்தின் முடிவில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

---

BSNLநிறுவனத்தின்நிதியாதாரத்தை பாதுகாக்கவும்,3G ஸ்பெக்ட்ரத்திற்காக,BWAக்காக செலுத்தப்பட்ட ரூ 18500 கோடியை மத்திய அரசு உடன் திருப்பித்தர இக்கருத்தரங்கம் வற்புறுத்துகிறது.தொலைத் தொடர்பு அமைச்சர் மத்திய அரசிற்கு எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையில் இத்தொகை திருப்பித்தரப்பட வேண்டும்.

வர்த்தகரீதியாக நட்டம் தரக்கூடிய பல்வேறு சேவைபகுதிகளின் ஆக உயர் ஏலத்தொகையையும், BSNL ஐ கட்டவைத்திருப்பது ஏற்புக்குரிய ஒன்றல்ல. 3G/BWA அலைவரிசை Reserve செய்தது போல, reserve price தாண்டி ஆறுமடங்கு உயர்த்தி BSNL நிதியாதாரத்தை முடக்கியதை இக்கருத்தரங்கம் கண்டிக்கிறது.

கடந்த 5 அண்டுகளுக்கும் மேலாக BSNL நிறுவனத்திற்கு கருவிகள் சப்ளைஆகவில்லை.இதற்கான தடைக்கற்களை மத்திய அரசு திட்டமிட்டு உருவாக்கி வந்துள்ளது.2005.ம் ஆண்டிலும் அதை அடுத்து 2009ம் ஆண்டிலும் சேவை விரிவாக்கத்திற்கான கருவிகளை வாங்குவதற்கு BSNL நிறுவனம் இரண்டு முறை வெளியிட்ட டெண்டர்களை மத்திய அரசு ரத்து செய்து விட்டது. தேவையான கருவிகள் சப்ளை ஆகாத காரணத்தினால் BSNL நிறுவனத்தினால் தனது நெட் ஒர்க்கினை விரிவாக்கம் செய்ய முடியவில்லை. இதன் காரணமாக இந்நிறுவனத்தின் சேவையின் தரம் திருப்திகரமாக இல்லாததோடு, தனியார் நிறுவனங்களுக்கு நிகராக போட்டியிட்டு புதிய வாடிக்கையாளர்களையும் பிடிக்க இயலாமல் போய்விட்டது என்பதை கவலையோடு சுட்டிக்காட்டுகிறோம்.

மத்திய அரசின் சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றுவதன் ஒரு பகுதியாக கிராமபுறங்களிலும், மிகவும் தொலை தூர மற்றும் பின் தங்கிய மாநிலங்களிலும் BSNL நிறுவனம்தான் சேவை வழங்குகிறது.இதன் காரணமாக இந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து(Access Deficit Charge) என்ற கட்டணத்தை அரசு வசூலித்து BSNL நிறுவனத்திற்கு கிட்டத்தட்ட ஆண்டொன்றுக்கு ரூ.7000/-கோடிவரை கிடைத்து வந்தது. அரசின் கொள்கைபடி இந்த ADC கட்டணம் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது.இதேபோன்று BSNL-க்கு விரோதமான பல கொள்கைகளை அரசு அமுல் படுத்தி வருகிறது.

மாவட்ட, மாநில மற்றும் அனைந்திய மட்டங்கள் வரை BSNL நிறுவனத்தை நிர்வகித்து வருவது ITS அதிகாரிகள் ஆவர். BSNL நிறுவனம் துவங்கபட்டு 10ஆண்டுகள் ஆன பின்பும் இந்த அதிகாரிகள் இன்னும் BSNL நிறுவனத்தின் ஊழியர்களாக மாறாமல் Deputation ல் இருந்து வருகின்றனர். இதன் காரணமாக இந்நிறுவனத்தை நிர்வகிப்பதில் இந்த ITS அதிகாரிகளுக்கு அக்கறையற்ற மனநிலை இருந்து வருகிறது. உடனடியாக ITS அதிகாரிகள் BSNL நிறுவனத்தின் ஊழியர்களாக மாற வேண்டும் என இச்சிறப்புக்கருத்தரங்கம் கேட்டுக் கொள்கிறது.

BSNL நிறுவனத்தை பாதுகாப்பதற்கு கூட்டு நடவடிக்கை குழு ஊழியர்களிடமும், பொது மக்களின் அதரவையும் திரட்டுவதற்காக முயற்சித்துவரும், அதே வேளையில் இன்னொரு பக்கத்தில் இந்திய நாட்டின் நிதி அமைச்சரையும்,பிரதமரையும் சந்தித்து பிரச்சனைகளை சுமுகமாக பேசித்தீர்பதற்கான முயற்ச்சிக்ளையும் எடுத்து வருகிறது. பிரச்சனைகளை சுமுகமாக பேசித் தீர்ப்பதற்கான முயற்சி பலனளிக்கவில்லை என்றால் BSNL நிறுவனம் மிக விரைவில் நலிவடைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.இதனால் பொதுமக்கள் கடுமையான பாதிப்பிற்குள்ளாவார்கள் என்பதை நாங்கள் காலத்தே எச்சரிக்க விரும்புகிறோம்.BSNL நிறுவனம் தனியார்மயம் ஆகுமானால் இந்திய தொலைதொடர்பு துறை முழுக்க முழுக்க தனியாரின் கட்டுபாட்டுக்குள் சென்று விடும். BSNL என்ற அரசுத்துறை நிறுவனம் இன்று இருப்பதன் காரணமாகவே தனியார் நிறுவனங்களால் தங்கள் இஷ்டத்திற்கு கட்டணங்களை உயர்த்தி மக்களை கொள்ளையடிக்க முடியவில்லை. மாறாக,BSNL நிறுவனம் நலிவடைந்துவிட்டாலோ, அல்லது தனியார் மயம் ஆக்கபட்டாலோ, தனியார் நிறுவனங்கள் தங்களுக்குள் ரகசிய உடன்பாடு (cartels) செய்து கொண்டு கட்டணங்களைத் தாறுமாறாக உயர்த்தும். எனவே BSNL நிறுவனம் லாபகரமாக செயல்படவும், அரசுதுறை நிறுவனமாக நீடிக்கவும் பொதுமக்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று இச்சிறப்புக்கருத்தரங்கம் கேட்டுக் கொள்கிறது.
தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து கருத்தரங்கத்திற்க்கு ஆயிரக்கணக்கில் திரண்ட தோழர்கள்,அனைத்து சங்க தலைவர்கள்,மத்திய சங்க தலைவர்களுக்கு கருத்தரங்கம் நன்றி பாராட்டுகிறது.

**முன்மொழிதல்**

**எஸ். செல்லப்பா**
Convener JAC
தமிழ் மாநிலம்

**சி.கே.மதிவாணன்**
President JAC
சென்னை தொலைபேசி

**வழிமொழிதல்**

**பட்டாபிராமன்**
President JAC
தமிழ் மாநிலம்

**கே கோவிந்தராஜ்**
Convener JAC
சென்னை தொலைபேசி